**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

# C.P.No.51/2018

**Deposition of RW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திர சேகரன் | Husband / Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Age | : | Calling | : |

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Tmt. N. Mani, Deputy Nazir, Bench Clerk of this court on 25.11.2021 in accordance with Provisions X of Evidence Act 1872.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

நான் 1 வது எதிர்மனுதாரருக்காக சாட்சியம் அளிக்கிறேன். நான் 1 ஆம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் ஓய்வூதியப்பிரிவில் முதுநிலை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். ஓய்வூதிய நம்பக விதிகள் எனக்கு தெரியும். ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் ஓய்வூதியம் சம்பந்தமான கருத்துரு (Proposal) 2 வது எதிர்மனுதாரருக்கு அனுப்பும் போது அந்த தொழிலாளி கடைசியாக பெற்ற அடிப்படை சம்பளம், தர ஊதியம், அகவிலைப்படி ஆகியவை பற்றிய விவரங்களுடன் அனுப்பிவைப்பீர்களா என்றால் அவ்வாறு அனுப்பிவைப்பது இல்லை, அந்த தொழிலாளி கடைசியாக பெற்ற அடிப்படை சம்பளத்தை மட்டும் குறிப்பிட்டு proposal அனுப்பிவைப்போம். ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு 1 ஆம் எதிர்மனுதாரர் பென்சன் வழங்க கடமைப்பட்டவர். 1 ஆம்

எதிர்மனுதாரருக்காக 2 ஆம் எதிர்மனுதாரர் ஓய்வூதிய நிதி நம்பகம் அந்த பணியை செய்து வருகிறது என்றால் சரி. ஓய்வுபெற்ற அனைத்து தொழிலாளர்களுக்கும் ஓய்வூதிய விண்ணப்ப படிவம் வழங்கப்படுகிறதா என்றால் இல்லை, ஓய்வூதியம் பெற தகுதி உள்ளவர்களுக்கு மட்டும் விண்ணப்ப படிவம் வழங்கப்படுகிறது. 1 ஆம் எதிர்மனுதாரர் நிர்வாகம் விண்ணப்ப படிவத்தை வழங்குகிறது என்றால் சரி. மனுதாரருக்கு ஓய்வூதிய விண்ணப்ப படிவம் வழங்கப்படவில்லை ஏனென்றால் அவருக்கு ஓய்வூதியம் பெற தகுதி இல்லை. ம.சா.ஆ.1 கடிதம் எங்கள் அலுவலகத்திலிருந்து மனுதாரருக்கு 20.06.2017 ந் தேதி அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரி. மனுதாரரின் சம்பளத்திலிருந்து 19.11.1999 முதல் வருங்கால வைப்புநிதி பிடித்தம் செய்யப்பட்டது என்றால் சரி. அந்த தொகையினை வட்டியுடன் 31.08.2019 ந் தேதி மனுதாரருக்கு ரூ. 3,09,947/- திருப்பி கொடுத்துவிட்டோம். வழக்கு நிலுவையில் இருக்கும்போது கொடுத்துள்ளோம் என்றால் சரி. மனுதாரர் 01.04.2003 தேதிக்கு முன்பு பணியில் அமர்த்தப்பட்டவர் என்றால் சரி, மனுதாரர் 19.11.1999 ஆம் தேதி மனுதாரர் பணியில் அமர்த்தப்பட்டார். பங்களிப்பு ஓய்வூதியம் சம்பந்தமாக ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் திருத்தம் செய்யப்பட்டு கடந்த 06.08.2003 ந் தேதி அரசாணை எண்.259 பிறப்பிக்கப்பட்டது என்றால் சரி. அந்த அரசாணையில் 01.04.2003 தேதிக்கு பிறகு பணிநியமனம் செய்யப்படும் Pensionable Establishment யை சேர்ந்த தொழிலாளர்களுக்கு இவ்விதிகள்

பொருந்ததாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. ஓய்வூதிய நம்பக விதி பிரிவு 2 (O) வில் பங்களிப்பு பணி (Contributory Service) என்பது உறுப்பினர்களிடமிருந்து பங்களிப்பு சந்தா பெறப்பட்ட காலத்திற்குரிய பணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. ஓய்வூதிய விதி பிரிவு 2 (P) (II) இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழிலாளி எந்த தேதியில் நிரந்தரம் செய்யப்பட்டாரோ அல்லது எந்த தேதியில் அரசு போக்குவரத்துக் கழக வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராக உள்ளாரோ அந்த தேதி ஓய்வூதிய கணக்கீட்டு காலத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றால் சரியல்ல. மனுதாரர் 19.11.1999 ந் தேதி பணியில் சேர்ந்து 30.06.2017 ந் தேதி ஓய்வு பெற்றார் என்றால் சரி, மனுதாரர் பணியின் போது தவறிழைத்ததாக 8 முறை தண்டிக்கப்பட்டார், அதனால் அவர் 01.09.2005 ந் தேதிதான் பணிநிரந்தரம் செய்யப்பட்டார், அதனால் அவர் ஓய்வூதியம் பெற தகுதியற்றவர் ஆவார். 01.09.1989 ந் தேதி போடப்பட்ட 12 (3) செட்டில்மண்ட் படி நியமனம் செய்யப்பட்ட தொழிலாளி 240 நாட்கள் பணி புரிந்தவுடன் அவருக்கு பணிநிரந்தரம் வழங்கப்பட வேண்டும் என்றும், அவருக்கு எதிராக ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தால் அதனை 60 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்றும், ஒழுங்கு நடவடிக்கையின் முடிவில் 3 மாத காலத்திற்கு மேல் நிரந்தர படுத்துதலை தள்ளிவைக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி, ஆனால் மனுதாரருக்கு அந்த செட்டில்மண்ட் பொருந்தாது. மேற்படி 12 (3) செட்டில்மண்ட்டில்

குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை மீறி மனுதாரரின் பணி நிரந்தரத்தை 3 மாதங்களுக்கு மேல் தள்ளிவைத்த காரணத்தினால் தான் அவருக்கு காலதாமதமாக பணிநிரந்தரம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலுவையில் இருந்தபொழுது மனுதாரருக்கு தெரியாமல் அவருடைய வருங்கால வைப்புநிதியை அவருக்கு வழங்கியதால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு நிர்வாகமே பொறுப்பு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

(Sd/ T.Munusamy)
Presiding Officer,
Labour Court, Salem.